**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, CrPC)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.615/2023 |
| Deposition of witness for Prosecution | : | P.W– 3 |
| Name | : | கோமதி, வயது 48 |
| Father Name/Husband Name | : | செல்லத்துரை |
| Village | : | கயத்தார் |
| Taluk | : | கயத்தார் |
| Calling | : | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 06th day of July 2026.

**(A1 – A3 present).**

**<u>முதல் விசாரணை</u>**

1 நான் தற்போது கயத்தாரில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 எனது மகள். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் எனது மருமகன் மற்றும் சம்பந்திகள் ஆவார்கள். சம்பவ காலத்தில் எனது மகளுக்கும், எனது மருமகனுக்கும் வீட்டில் சிறு பிரச்சனைகள் ஏற்பட்டது. அதனால் சந்தேகத்தின் பேரில் எதிரிகள் மீது மிகைப்படுத்தி அ.சா.1 புகார் கொடுத்தார். இவ்வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு வழங்கப்பட்டு பிறழ் சாட்சியாக விசாரிக்கப்பட்டது)**

**<u>அரசு தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

2. கடந்த 05.09.2022 ஆம் தேதி அ.சா.1 க்கும், ஆஜர் எதிரியான எனது மருமகன் மகராஜாவுக்கும் கயத்தார் கோதண்டராமஸ்வரர் அகிலாண்டேஸ்வரி அம்மன் கோவிலில் வைத்து திருமணம் நடைபெற்றதாகவும், திருமணம் முடிந்த நாளிலிருந்து ஆஜர் எதிரியான எனது மருமகன் அ.சா1ன் அடிப்படை தேவைகளைகூட செய்ததது கிடையாது. வெளியே எங்கேயும் அழைத்து செல்வது கிடையாது. அவருக்கு மதுகுடிக்கும், புகைபிடிக்கும் பழக்கம் இருப்பதால் தினசரி வீட்டிற்கு வந்து அ.சா.1 யை தகாத வார்த்தைகளால் திட்டி, அ.சா.1 யை

மனதளவில் கொடுமைப்படுத்தி மற்றும் 2 வது மற்றும் 3 வது எதிரியான அ.சா.1 ன் மாமனார், மாமியார் ஆகியோர்களும் சேர்ந்து கொண்டு அ.சா.1 யை அசிங்கமான வார்த்தைகாளல் திட்டி கொடுமைப்படுத்தியதாகவும், அ.சா.1 யை தற்கொலைக்கு பலமுறை தூண்டியதாகவும், பின்னர் 12.04.2023 ஆம் தேதி காலை 10.00 மணிக்கு அ.சா.1 யை ஆஜர் எதிரிகள் அசா.1 யை தகாத வார்த்தைகளால் திட்டி, இடது கன்னத்தில் அடித்து மற்றும் கழுத்தை பிடித்து வீட்டை விட்டு வெளியே தள்ளி அ.சா.1 ன் செல்போனை பிடிங்கி வைத்துக் கொண்டு மிரட்டியதாகவும், இது குறித்து அ.சா.1 கோவில்பட்டி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தாகவும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு நீதிமன்றத்திற்கு வெளியே ஆஜர் எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்டதால் அரசு தரப்பிற்கு எதிராக பிறழ் சாட்சியம் சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை இல்லை.**

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.